# யூலை – 17 – செவ்வாய்

## புனித அலெக்சிஸ்

**“தீர்ப்புநாளில் சோதோமுக்குக் கிடைக்கும் தண்டனையைவிட உனக்குக் கிடைக்கும் தண்டனை கடினமாகவே இருக்கும் எனநான் உங்களுக்குச் சொல்கிறேன்.”** *மத். 11:24*

**முதல் வாசகம் : ஏசாயா 7 : 1 – 9**

உசியாவின் பேரனும் யோதாமின் மகனுமான ஆகாசு யூதா நாட்டை ஆட்சி செய்தநாள்களில், இரட்சின் என்னும் சிரியா நாட்டு அரசனும் இரமலியாவின் மகன் பெக்கா என்னும் இஸ்ரயேல் நாட்டு அரசனும் எருசலேமுக்கு எதிராகப் போர்தொடுத்து அதை வீழ்த்த முயன்றனர். அவர்களால் அது இயலாமற்போயிற்று.“சிரியா எப்ராயிமோடு கூட்டணி அமைத்துக்கொண்டது“ என்னும் செய்தி தாவீதின் குடும்பத்தாருக்கு அறிவிக்கப்பட்டது. உடனே பெருங்காற்றினால் காட்டுமரங்கள் அலையதிர்வுகொள்வதுபோல், ஆகாசின் உள்ளமும் அவர்நாட்டு மக்களின் உள்ளங்களும் அலைக்கழிக்கப்பட்டன. அப்பொழுது ஆண்டவர் எசாயாவை நோக்கி ”நீ உன்மகன் செயார் யாசிபை உன்னுடன் அழைத்துச் சென்று ஆகாசைச் சந்திப்பாயாக. வண்ணான் வயலுக்குச் செல்லும்வழியில், மேற்குளத்துக்குப்போகும் கால்வாயின் மறுமுனையில் நீ ஆகாசைக் காண்பாய். அவனுக்கு இதைச்சொல்” நீ அமைதியாய் இரு. அஞ்சாதிருந்து நடப்பனவற்றை உற்றுப்பார் இரட்சின், சிரியா நாட்டினர், இரமலியாவின் மகன் ஆகியோரின் கடும் சினத்தைக்கண்டு மனங்கலங்காதே. அவர்கள் புகைந்து கொண்டிருக்கும் இருகொள்ளிக்கட்டைகளிலிருந்து வரும் புகைபோன்றவர்கள். சிரியா எப்ராயிமோடும் இரமலியாவின் மகனோடும் உனக்கெதிராய்ச் சதித்திட்டம்தீட்டி,“யூதாவுக்கு எதிராய் நாம் படை எடுத்துச் சென்று அதை நடுநடுங்கச்செய்வோம் அதற்கு எதிராய்ப்போரிட்டு, அதைப்பிடித்து தயேல் என்பவனின் மகனை அதற்கு அரசனாக்குவோம்“ என்று தங்களுக்குள் பேசிக்கொள்கிறார்கள். ஆதலால் ஆண்டவர் இவ்வாறு உரைக்கிறார், ”அவர்களது திட்டம் நிலைத்து நிற்காது, அது ஒருபோதும் நிறைவேறாது. ஏனெனில் சிரியாவின் தலைநகர் தமஸ்க் தமஸ்கு நகரின் தலைவன் இரட்சின். (இன்னும் அறுபத்தைந்து ஆண்டுகளில் எப்ராயிம் ஒரு மக்களினம் என்னும் தகுதியை இழக்கும் வண்ணம் தவிடு பொடியாக்கப்படும்) எப்ராயிமின் தலைநகர் சமாரியா சமாரியா நகரின் தலைவன் இரமலியாவின் மகன். உங்கள் நம்பிக்கையில் நிலைத்திராவிடில் நீங்களும் நிலைத்துநிற்க மாட்டீர்கள். ”

**பதில்பாடல் :** கடவுள் தம் நகரை எந்நாளும் நிலைத்திருக்கச் செய்வார்.

**நற்செய்தி : மத்தேயு11 : 20 – 24**

அக்காலத்தில் இயேசு வல்லசெயல்கள் பல நிகழ்த்திய நகரங்கள் மனம் மாறவில்லை. எனவே அவர் அவற்றைக் கண்டிக்கத் தொடங்கினார். ”கொராசின் நகரே, ஐயோ! உனக்குக்கேடு! பெத்சாய்தா நகரே, ஐயோ! உனக்குக்கேடு! ஏனெனில் உங்களிடையே செய்யப்பட்ட வல்லசெயல்கள் தீர், சீதோன் நகரங்களில் செய்யப்பட்டிருந்தால் அங்குள்ள மக்கள் முன்பே சாக்கு உடை உடுத்திச் சாம்பல்பூசி மனம்மாறியிருப்பர்.தீர்ப்பு நாளில் தீருக்கும்இ சீதோனுக்கும் கிடைக்கும் தண்டனையைவிட உங்களுக்குக் கிடைக்கும் தண்டனை கடினமாகவே இருக்கும் என நான் உங்களுக்குச் சொல்கிறேன்.கப்பர்நாகுமே, நீ வானளாவ உயர்த்தப்படுவாயோ? இல்லை, பாதாளம்வரை தாழ்த்தப்படுவாய். ஏனெனில் உன்னிடம் செய்யப்பட்ட வல்லசெயல்கள் சோதோமில் செய்யப்பட்டிருந்தால் அது இன்றுவரை நிலைத்திருக்குமே!தீர்ப்பு நாளில் சோதோமுக்குக் கிடைக்கும் தண்டனையை விட உனக்குக் கிடைக்கும் தண்டனை கடினமாகவே இருக்கும் என நான் உங்களுக்குச் சொல்கிறேன்” என்றார்.

**தியானம்:** கடவுள் இரக்கமுள்ளவர்: பொறுமை உள்ளவர்: கண்டிக்கக் காலம் தாழ்த்துபவர் எனநாம் அறிந்திருக்கிறோம். இவ்வாறிருக்க, இன்றைய இறைவார்த்தைகள் நமக்குச் சற்றுச் சந்தேகத்தை உண்டு பண்ணுவதாக அமைந்திருக்கலாம் அல்லவா! பலசமயங்களில் அவர் நீதியுள்ளவர் என்பதை நாம் மறந்துவிடுவதே இவ்வாறான குழப்பநிலைகளுக்குக் காரணம். சிரியா எப்ராயிமோடு கூட்டணி அமைத்துக் கொண்டு தனக்கெதிராகப் போர்தொடுக்கப் போவதாகச் செய்தி கேட்டவுடனே தாவீதுமன்னன் கலங்கினான். ஆனால்,கடவுள் இறைவாக்கினர் எசாயா மூலமாக “நீ அமைதியாய் இரு: அஞ்சாதிருந்து நடப்பனவற்றை உற்றுப்பார்: இரட்சின், சிரியா நாட்டினர், இரமலியாவின் மகன் ஆகியோரின் கடும் சினத்தைக் கண்டு மனங்கலங்காதே. அவர்கள் புகைந்து கொண்டிருக்கும் இரு கொள்ளிக் கட்டைகளிலிருந்து வரும் புகை போன்றவர்கள். ”என்ற வார்த்தைகள் வழியாக அவனை அமைதிப்படுத்துகின்றார். அத்துடன் “உங்கள் நம்பிக்கையில் நிலைத்திராவிடில் நீங்களும் நிலைத்து நிற்கமாட்டீர்கள்.” என்ற செய்தியையும் அறிவிக்கின்றார். நம் வாழ்க்கையிலே நாம் நிலை குலைந்து நின்ற சந்தர்ப்பங்கள் எத்தனை? சந்தித்த ஆபத்துக்கள் எத்தனை? உயிரைக் கையிலேந்தி ஓட்டமெடுத்த நாட்கள் எத்தனை? அனைத்தையும் மறந்து இன்று நாம் பணத்தின் மேலும், பதவிமேலும், வீண் பெருமை மீதும் நின்று போடும் ஆட்டங்கள் எத்தனை எத்தனை? சிந்திப்போம் செயற்படுவோம்.